A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 22 / 2023**

திரு இரா. சரவணராஜ்,
21, சாய் நகர், போரூர் கார்டன் பேஸ் I,
வானகரம், சென்னை – 600095.

………மேல்முறையீட்டாளர்
(திரு இரா. சரவணராஜ் &
திரு M. யுவராஜ், வழக்கறிஞர்)

எதிர்

1. உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/அம்பாசமுத்திரம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அம்பை – 627 405.

2. உதவி பொறியாளர்/ விநியோகம்/கடையம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV கடையம் துணை நிலைய வளாகம்,
கட்டேரிப்பேட்டை, தென்காசி.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு D. அருள்ராஜ், உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/அம்பாசமுத்திரம்
திருK. சுப்பையா, உதவி பொறியாளர்/ விநியோகம்/கடையம்)

**மனு பெறப்பட்ட நாள்: 24-03-2023**

**கேட்புரை நாள்: 17-05-2023**

**ஆணை நாள்: 24-05-2023**

24.03.2023 அன்று பெறப்பட்ட திரு இரா.சரவணராஜ், 21, சாய் நகர், போரூர் கார்டன் பேஸ் I, வானகரம், சென்னை – 600 095 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 22/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 17.05.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள

வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

புல எண் 29, 32/10, 527, 456–இல் நடப்பட்டிற்கும் மின்கம்பங்களை மாற்றியமைக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 புல எண் 29, 32/10, 527, 456–இல் நடப்பட்டுள்ள உயரமுத்த மின்கம்பங்களை மாற்றி அமைக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 உயரமுத்த மின்கம்பங்கள் சாலை ஓரத்தில் மின்வாரிய விதிகளுக்குட்பட்டு நிறுவப்பட்டுள்ளதாகவும், மின்பாதையை மாற்றி அமைக்க மேல்முறையீட்டாளர் விரும்பினால் பங்களிப்பு திட்ட முறையில் விண்ணப்பம் அளித்து, அதற்குண்டான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில், மின்கம்பங்கள் மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, மின்கம்பங்களை மாற்றி அமைக்ககோரி மேல்முறையீட்டாளர் திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 28.06.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம் 04.11.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 திருநெல்வேலி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 04.11.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து, இனிவரும் காலங்களில் இதுபோன்று தவறுகள் நிகழாதவாறு உரிய காலத்தில் கணக்கீடு எடுக்கவும், மற்றும் கணக்கீடு எடுக்க இயலாத மின்இணைப்புகளின் பயனீட்டாளர்களிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களின் ஒத்துழைப்புடன் கணக்கீட்டுப்பணி மேற்கொள்ளவும் பணியாளர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்குமாறு கோட்டப்பொறியாளரிடம் எடுத்துரைக்கப்பட்டது. ஆகவே மனுவானது இத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.*

***<u>முடிவுரை :-</u>***

*கணக்கீட்டு பணியாளர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட கோட்டப்பொறியாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. எதிர்வரும் காலங்களில் இதுபோன்று நிகழாதவாறும் மற்றும் மின்பயனீட்டாளர்களிடம் கனிவாக நடந்து கொள்ளுமாறு பணியாளர்களுக்கு எடுத்துரைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டு மனுவானது இத்துடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 17.05.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு இரா. சரவணராஜ் மற்றும் திரு M. யுவராஜ், வழக்கறிஞர் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு D. அருள்ராஜ், உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/ அம்பாசமுத்திரம் மற்றும் திரு K. சுப்பையா, உதவி பொறியாளர்/ விநியோகம்/கடையம், திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர்

மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் 28-06-2022 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு எண் 043/2022 (Online Pettition: -No: 2806220223490) படி தென்காசி மாவட்டத்தில் உள்ள அல்முபாரக் / ராஜலட்சுமி குவாரிக்கு செல்லும் உயர் அழுத்த மின்கம்பங்களை, பணி நிமித்தம் சென்னையில் வசிக்கும் சூழலில் நான்கு வெவ்வேறு இடங்களில் உள்ள தங்களது குடும்ப நிலத்தை ஆக்கிரமிப்பு/இடையூறு செய்ததை மற்றும் அதிகாரிகளின் லஞ்ச ஊழலை சட்டபூர்வமாக ஆட்சேபனை தெரிவித்ததால் மின்சார வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களால் தொடர்ச்சியாக மன/உடல் சோர்வடையும் வகையில் உளவியல் தாக்குதலுக்கு ஆளாவதாகவும் இது சம்பந்தமாக 29-10-2022 அன்று நடந்த நுகர்வோர் குறை தீர்க்கும் மன்ற விசாரணையில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 புல எண் 29ல் தங்களது இடத்திற்கு இடையூறாக, எதிரே போதிய இடம் இருந்தும் எதிர்ப்பை மீறி நடப்பட்ட இரண்டு உயர் அழுத்த மின்கம்பங்களை, இந்த மின்கம்பங்கள் மூலம் மின் இணைப்பு பயன்படுத்தும் அல்முபாரக் கிரஷர் பகுதி வழியாக மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்கு பதில் அளித்த தலைவர் கிரஷர் உரிமையாளர்களிடம் பேசி மாற்றி தருகிறேன் என்று கூறியதாகவும், ஆனால் கிரஷர் உரிமையாளர்கள் அவர்கள் பகுதியில் மாற்றி அமைக்க ஒப்புதல் அளித்த பிறகும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 வழக்கு நிலுவையில் இருக்கும் போது தங்களது பட்டா இடமான புல எண் 32/10, 11ல் மின்சார வாரிய அதிகாரி முரசொலி மாறன் தலைமையில் மின்சார வாரிய ஊழியர்கள் சட்டவிரோதமாக, அத்துமீறி தாங்கள் போட்ட முள் வேலிகளை உடைத்து நடப்பட்ட 5 உயர் அழுத்த மின்கம்பத்தை, குடியிருப்பு பகுதிக்கு இடையூறு இல்லாமல்

மாற்று வழியில் கொண்டு செல்ல வேண்டும் எனவும், இதனால் தங்கள் குடும்ப நிலத்தை பாக பிரிவினை செய்ய முடியவில்லை எனவும், மேலும் ஏற்கனவே இருந்த கட்டிடத்திற்கு மேல் இணைப்பு செல்வதால் மாடி கட்டஅனுமதி நிராகரிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 குவாரியில் வேலை பார்த்து, அதனால் பாதிக்கப்பட்ட ராம்சிங் என்பவர் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது அதனால் தான் அதிகாரிகள் மின் இணைப்பு இழுத்தனர் என்று அதிகாரிகள் வாதிட்டதாகவும், வழக்கு தள்ளுபடி ஆகவில்லை, தீர்க்கப்பட்டது என்று வாதிட்டேன். "The liberty of the applicant to move the appropriate authority under Electricity Supply Act 2003 and Telegraph Act for redressal of grievance, if any, drawing of electric line is left open" என்று தான் தீர்த்து வைக்கபட்டது என்று கூறியதாகவும், மேலும் தங்களுக்கு எந்த வித முன்அறிவிப்பும் கொடுக்கவில்லை, தொலைபேசி, ஈமெயில் மூலம் உடனே ஆட்சேபனை தெரிவித்தும் அதிகார பலத்தால் இணைப்பு இழுத்தனர் என்று கூறியதாகவும், இந்த இணைப்பால் லாபம் பெரும் குவாரி உரிமையாளர்களிடம் பேசி மாற்று வழியில் கொண்டு செல்ல ஆவண கூறியதாகவும் இதுவரை நடவடிக்கை இல்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 புல எண் 527 எதிரே போதிய அரசுக்கு சொந்தமான அகலமான வழிப்பாதை இருந்தும், தாங்கள் விவசாயம் செய்யும் இடத்திற்கு இடையூறாக. 7 உயர் அழுத்த மின்கம்பம் நடப்பட்டுள்ளதாகவும், போதிய நேரம் இல்லாததால் இதை பற்றி விவாதிக்கவில்லை எனவும், புல எண் 456ல் மறுபக்கம் ஓடை வழிப்பாதை இருந்தாலும், வரப்பு ஓரம் நடாமல் 15 அடி உட்பக்கம் இரண்டு உயர் அழுத்த மின்கம்பங்கள் 1 ட்ரான்ஸ்போர்மர் நடப்பட்டதாகவும், இதனால் 20 சென்ட் இடத்தில் தான் பயிர் செய்ய இயலாத நிலை ஏற்பட்டதாகவும், அந்த ட்ரான்ஸ்பார்மர் வழியாகத்தான் தனக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டதாக, இளநிலை பொறியாளர் தவறான தகவல் மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்து உள்ளதாகவும், அதிகாரி அவர்கள் களப்பணி செய்து மாற்றி வேலி ஓரம் மாற்றி தர ஏற்பாடு செய்வதாக கூறியதாகவும், இதுவரை எந்த ஒரு நடவடிக்கை இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தனது மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக இரு உடைந்த உயர் அழுத்த மின்கம்பங்களை புல எண் 458 நடுவே வீசி விட்டு சென்றதாகவும், இதனால் கடந்த 1 வருடமாக விவசாயம் செய்ய இயலவில்லை என்றும் இதை அகற்ற கோரியதற்கு, முதலில் தன்னை பணம் கட்ட கூறியதாகவும், இந்த புகைப்படத்தை வாங்கி வைத்த அதிகாரி, அதை அகற்ற ஏற்பாடு செய்வதாக கூறியதாகவும், ஆனால் இது அகற்றப்படவில்லை என்றும் தனது மேல் முறையீட்டிற்கு (02–01–2023) பிறகுதான், தனக்கு எந்த ஒரு தகவலும் தெரிவிக்காமல் 30–01–2023 அன்று இரு மின்கம்பங்கள் அகற்றிடப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 இது போன்ற எந்த ஒரு புகாருக்கும் (Ref:மனு எண்: 54/2022–23) மின்சார வாரிய நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் "மனுதாரர் ஆட்சேபனைதாரர்களிடம் இணைப்பாக பேசி நிவர்த்தி செய்யும் பட்சத்தில் மின் இணைப்பு கொடுக்கப்படும்" என்று தீர்வு வழங்கிய போது, பலருக்கும் வேண்டுகோளுக்கு ஏற்ப மின்வழித்தடத்தை மாற்றிய மின்சார வாரிய அதிகாரிகள், மாற்று வழிப்பாதை இருந்தும் உள்ளூர் ஊர் தலைவர்களுக்கு பணம் கொடுத்து குவாரி உரிமையாளர்களின் பண மற்றும் அரசியல் பலத்தின் காரணமாக தங்கள் வேலியை உடைத்து அத்துமீறி ஆட்சேபனை மீறி குவாரிக்கு மின் இணைப்பு கொடுத்தது ஜனநாயக படுகொலை என்றும், நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற விசாரணையில் விவாதித்த மேற்கண்ட புகார்களுக்கும், ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மேலும் இதுபற்றி மன்றத்தின் தீர்ப்பு அறிவிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்றும், இந்த நிகழ்விற்கு பிறகு மின்சார வாரிய ஊழியர்கள் தங்கள் குடும்பத்திற்கு தொடர்ச்சியாக உளவியல் ரீதியான தொல்லைகள் கொடுத்து வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 ஆழ்வார்குறிச்சி மின்வாரிய பகுதியில் உள்ள AP நாடானூரில் உள்ள தங்களது வீட்டிற்கு (எண்:07055009275) மீட்டர் வீட்டிற்கு வெளியே இருந்தும், கேட்டில் பூட்டு போடாத சூழலில் ரீடிங் எடுக்காமல் டோர் லாக் என்று அதிக பில் வருவது போல செய்வதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 முருகண்டியூரில் உள்ள தங்கள் குடும்ப வீட்டிற்கு மின் கட்டண விகிதத்தை மாற்ற கோரி ஆழ்வார் குறிச்சி AEக்கு அனுப்பிய விண்ணப்பம் முறையான பதில்

கொடுக்காமல் பலமுறை ரிஜெக்ட் செய்யப்பட்டு, வேலி அமைத்தால் கட்டண விகிதம் மாற்றி தருகிறோம் என்று கடந்த முறை கூறி, வேலி அமைத்த பிறகு ஆய்விற்கு கூட வரவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 விவசாய IIIA இணைப்பிற்கு(0706016615), ஓபன் போஸ்டில் உள்ள மீட்டர் டோர் லாக் என்று 18/02/22 அன்று ரீடிங் எடுக்காததால் புகார் எண் 435927 படி புகார் செய்ததாகவும், ஆனால் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மீண்டும் 19/04/22 அன்றும் ரீடிங் எடுக்காமல் 0 என்று அப்டேட் செய்தார்கள் என்றும் 18/06/22 அன்று 6 மாதத்திற்கான மொத்த ரீடிங் எடுத்து Rs.4,035/- பில் தொகையும் Rs. 3,407/- அதிக வோல்ட் சார்ஜ் என்றும் போடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மின்சார வாரிய அதிகாரிகள் ஊழியர்களிடம் "இதற்கு இனி உரிய காலத்தில் கணக்கீடு எடுக்கவும், பயனீட்டாளர்களிடம் கனிவோடு நடந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டதாகவும் கூறி இருந்தார்கள் என்றும் ஆனால் தீர்ப்பிற்கு பிறகும் டிசம்பர் 2022 ரீடிங் எடுக்காமல் "Previous Assessment Amount Billed" என்று அப்டேட் செய்து என்னை உளவியல் ரீதியாக தொல்லை செய்தனர் என்றும் தான் மேல் முறையீடு செய்த பிறகு பில் கடைசி தேதி அன்று ரீடிங் அப்பேட் செய்தனர் என்றும் இது மறுநாள் தனது தோட்டத்து இணைப்பை துண்டிக்க லைன் மேன் தொடர்பு கொண்டபோது தெரியவந்தது என்றும் ஊழியர்களின் தவறால் அபராதத்தோடு பணம் கட்டும் நிலைக்கு தள்ளப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 மேலும், புகார் 1ல் கூறப்பட்ட 5 புகாரில், 3 புகாருக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை, 2ல் கூறப்பட்ட 3 புகாரில் 1 புகாருக்கு நிரந்தர நடவடிக்கை எடுக்கப்படவில்லை, இதை திருநெல்வேலி நுகர்வோர் மன்ற அதிகாரிகளிடம் ஈமெயில் மூலம் தெரிவித்ததற்கு 31-01-23 ல் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு போதிய அவகாசம் கொடுக்காமல் 04-02-23 கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பாணை அனுப்பியதாகவும், தான் சென்னையில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதால் குறைந்த அவகாசத்தில் விடுப்பு எடுத்து செல்வது மிக கடினம் எனவும், தான் கலந்துகொள்ளாததால் மனு தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என்று பதில் அனுப்பி உள்ளதாகவும், அதிகாரிகளும் இவ்வாறு செய்வது மன உளைச்சலை ஏற்படுத்துவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 மேற்கூறிய 1 முதல் 5 புகாருக்கும் நடவடிக்கை எடுக்கிறோம் என்று தொடர்ச்சியாக கூறியதால், தான் உடனடியாக மேல்முறையீடு செய்யவில்லை எனவும், எந்த நடவடிக்கையும் இல்லாததால் 2 நாள் காலதாமதமாக மின்னஞ்சலில் மேல்முறையீடு செய்ததாகவும் அதன் பின் 06-01-2023 அன்று பதிவு தபால் மூலமும், 06-02-2023 அன்று மனு செய்ததாகவும், அதிகாரிகளின் வாக்குறுதி காரணமாக காலதாமதமானதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் தன்னுடைய நிலத்தின் வழியாக மின்கம்பங்கள் செல்லுவதை ஆட்சேபனை தெரிவித்து திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட நுகர்வோர் குறைத்தீர்க்கும் மன்றத்தில் மனு அளித்ததின் அடிப்படையில் மனுதாரர் நேரில் வந்து மன்றத்தில் கலந்து கொள்ளும் போது செயற்பொறியாளர்/விநியோகம்/ கல்லிடைக்குறிச்சி மற்றும் உதவி செயற்பொறியாளர்/விநியோகம்/அம்பாசமுத்திரம் ஆகியோர்களின் மூலம் உயரழுத்த மின்கம்பங்கள் சாலையோரத்தில் (Road Margin Area) மின்வாரிய விதிகளுக்குட்பட்டு நிறுவப்பெற்றுள்ள விபரம் எடுத்துரைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 புல எண் 29ல் 2 எண்ணம் உயரழுத்த மின்கம்பங்கள் சாலை ஓரத்தில் (ROAD MARGIN பகுதியில்) மின்வாரிய விதிகளுக்குட்பட்டு நிறுவப்பெற்றுள்ளதாகவும், இது சம்பந்தமாக OS : 346/2022 வழக்கானது தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், நீதிமன்ற தீர்ப்பின்படி மின்வாரிய விதிகளின் படி மேல்நடவடிக்கை தொடரப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 புல எண் 32/10, 11ல் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் 5 எண்ணம் உயரழுத்த மின்கம்பங்கள் மற்றும் மின்பாதையானது AP நாடாலூர் செல்லும் பிரதான தார்சாலையின் ஓரமாக (ROAD MARGIN பகுதியில்) வாரிய விதிகளின் படி போதிய உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இது சம்பந்தமாக OS : 346/2022 வழக்கானது தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், நீதிமன்ற தீர்ப்பின்படி மின்வாரிய விதிகளின் படி மேல்நடவடிக்கை

தொடரப்படும் எனவும், யாதொரு முள்வேலிகளும் உடைக்கப்படவில்லை எனவும், யாதொரு சட்ட விரோத செயலும், விதிமீறலும் ஏற்படவில்லை எனவும், மாடி கட்ட அனுமதிக்கும் அதிகாரத்திற்கும் மின்வாரியத்திற்கும் தொடர்பில்லை எனவும், ராம்சிங் குவாரி உரிமையாளர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் மின்வாரிய விதிகளுக்குட்பட்டு மேற்படி குவாரிக்கு மின்இணைப்பு கொடுக்கப்பட்டதாகவும், தாங்கள் கூறுவது போல் தொலைபேசி மற்றும் ஈமெயில் மூலம் தகவல் வரப்பெறவில்லை எனவும், எனவே தனிநபரின் இடத்தில் மின்கம்பங்கள் நடப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மனுதாரர் தெரிவிந்த 7 எண்ணம் உயரழுத்த மின்கம்பங்களானது முருகண்டியூர் செல்லும் பிரதான தார் சாலையின் ஓரமாக (ROAD MARGIN பகுதியில்) வாரிய விதிகளின் படி போதிய உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இது சம்மந்தமாக OS : 346/2022 வழக்கானது தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், நீதிமன்ற தீர்ப்பின்படி மின்வாரிய விதிகளின் படி மேல்நடவடிக்கை தொடரப்படும் எனவும், மனுதாரர் இடத்தில் யாதொரு மின்கம்பமும் நடப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 புல எண் 456ல் அமைக்கப்பட்டுள்ள இரண்டும் எண்ணம் உயரழுத்த மின்கம்பங்கள், ஒரு எண்ணம் 25 கி.வோ.ஆ மின்மாற்றி ஆகியவைகள் விவசாய மேம்பாடு திட்டத்தின் கீழ் (HVDS) விவசாயத்திற்காகவே நிறுவப்பெற்றுள்ளதாகவும், புல எண். 456யின் மறுபக்கத்தில் நீர்வழி ஓடைப்பாதை ஆகும். நீர்வழிபாதையில் மின்வாரிய விதிகளின் படி மின்கம்பங்கள் அமைக்கப்படக் கூடாது என்பதாலும் மின்கம்பங்களை அவ்விடத்தில் அமைக்கும் பட்சத்தில் மழைக்காலங்களில் ஓடையில் நீர்வரத்து அதிகமாக இருப்பின் மின் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஓடை வழியாக மின்கம்பங்களை நிறுவ இயலவில்லை மேலும் விவசாய நிலப்பகுதியின் வழியாக விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு மின்வாரிய கம்பங்கள் மற்றும் மின்பாதைகள் வாரிய விதிகளின்படி பலவருட காலமாக அமைக்கப்பட்டு வருகிறதாகவும், இதனால் மின்இழப்பு குறைகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 புல எண்:458இல் கிடந்த உடைந்த 2 எண்ணம் 9 மீட்டர் மின்கம்பங்கள் 30.01.2023 அன்று அகற்றப்பட்டது என்றும் நுகர்வோர் மீது யாதொரு காழ்ப்புணர்ச்சியும் இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மனுதாரர் தெரிவித்துள்ள மின்இணைப்பு, காம்பவுண்ட் சுவரின் உட்பகுதியில் இருக்கின்றதாகவும், 24.01.2022 அன்றும் 27.05.2022 அன்றும் மின்அளவீடு கணக்கீடு எடுக்க வரும் பொழுது காம்பவுண்ட் கேட் பூட்டப்பட்டுள்ளதாக கணக்கீட்டாளர் தெரிவித்துள்ளதாகவும், அதன் அடிப்படையிலேயே டோர் லாக் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 19.9.2022 அன்று புகாரில் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பினை சம்பந்தப்ட்ட பிரிவு பொறியாளரால் நேரில் களஆய்வு செய்யப்பட்டதாகவும், மின்அளவு 2239-KWH எனவும், மின்இணைப்பு எண் 07-055-009-275க்கு முறையாக மின் அளவியில் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கணக்கீடு (ASSESSMENT) செய்யப்படுகிறதாகவும், சரியான அளவீடு எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 முருகாண்டியூரில் உள்ள மனுதாரர் குடும்ப வீட்டிற்கு மின்கட்டண விகிதத்தை மாற்ற கோரும் கோரிக்கையான மின்இணைப்பு ஆய்வு செய்யப்பட்டு விகித பட்டியல் மாற்றம் 30.01.2023 அன்று செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 விவசாய மின்இணைப்பு எண் (TF-IIIAI) 07-060-016-615 மின்வாரிய கணக்கீட்டாளருக்கு எச்சரிக்கை குறிப்பாணை கொடுக்கப்பட்டு மேற்கொண்டு சரியான முறையில் மதிப்பீடு செய்ய அறிவுறுத்தப்பட்டு தற்சமயம் சரியான அளவீடு எடுக்கப்பட்டு வருகிறதாகவும், மேலும் டிசம்பர் மாதம் 2022ல் தவறுதலாக பதிவு செய்யப்பட்ட மின்நுகர்வு அளவினை திருத்தம் செய்து சரியான அளவீடு மீண்டும் பதிவு செய்யப்பட்டதாகவும், மின் நுகர்வுக்கான சரியான கட்டணம் மட்டுமே வசூல் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 புகார் 1ல் கூறப்பட்டுள்ள 5 புகார்களுக்கும், புகார் 2ல் கூறப்பட்டுள்ள 3 புகார்களுக்கும் அன்னாருக்கு முறையான விளக்கம் கூறப்பட்டுள்ளதாகவும், இது சம்பந்தமாக OS : 346/2022 வழக்கானது தென்காசி மாவட்டத்தில் உள்ள ஆலங்குளம் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும், நீதிமன்ற தீர்ப்பின்படி

மின்வாரிய விதிகளின்படி நிறுவப்பட்டுள்ள மின்கம்பங்கள் தொடர்பான அன்னாரின் மனுவிற்கு மேல்நடவடிக்கை தொடரப்பட்டதாகவும், மேலும் Billing சம்மந்தமான குறைகளும் விகிதப்பட்டியல் மாற்றம் தொடர்பான அன்னாரின் குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான புல எண் 29ல் தங்கள் இடத்திற்கு இடையூறாக எதிரே போதிய இடம் இருந்தும் எதிர்ப்பை மீறி நடப்பட்ட இரண்டு உயர்அழுத்த மின்கம்பங்களை, இந்த மின்கம்பங்கள் மூலம் மின்இணைப்பு பயன்படுத்தும் அல்முபாரக் கிரஷர் பகுதி வழியாக மாற்றி அமைக்க வேண்டும் எனவும், வழக்கு நிலுவையில் இருக்கும் போது தனக்கு சொந்தமான புல எண்: 32/10, 11ல் மின்சார வாரிய ஊழியர்கள் சட்ட விரோதமாக, அத்து மீறி தாங்கள் போட்ட முள்வேலிகளை உடைத்து நடப்பட்ட 5 உயர் அழுத்த மின்கம்பத்தை, குடியிருப்பு பகுதிக்கு இடையூறு இல்லாமல் மாற்று வழியில் கொண்டு செல்ல வேண்டும் எனவும், புல எண் 527 எதிரே போதிய அரசுக்கு சொந்தமான அகலமான வழிப்பாதை இருந்தும், தாங்கள் விவசாயம் செய்யும் இடத்திற்கு இடையூறாக 7 உயர் அழுத்த மின்கம்பம் நடப்பட்டுள்ளது எனவும், புல எண்: 456–இல் இரண்டு உயரமுத்த மின்கம்பங்கள் 1 ட்ரான்ஸ்பார்மர் நடப்பட்டு இதனால் 20 செண்டு நிலத்தில் தான் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது எனவும், தன் மீது உள்ள காழ்புணர்ச்சி காரணமாக இரு உடைந்த உயர் அழுத்த மின்கம்பங்களை புல எண்: 458யில் நடுவே வீசி விட்டு சென்றதால் கடந்த 1 வருடமாக விவசாயம் செய்ய இயலவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் தன்னுடைய பட்டா நிலங்களான புல எண் 29, புல எண் 32/10, 11, புல எண் 527, புல எண் 456–இல் மின்பாதை அமைக்கப்பட்டதாக வாதிட்டார். எதிர்மனுதாரர் மின்பாதை அமைக்கப்பட்ட இடம் பொதுவழி பாதை என்றும் அதற்கான ஆவணங்கள் VAO–விடமிருந்து பெறப்பட்டதை சமர்ப்பித்துள்ளார். மேலும் இந்த பொதுவழி பாதையில் survey No. 32/10, 11 மின்பாதை அமைக்கப்பட்டதற்கு

அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு OS No.346/2022 நிலுவையில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய நிலஉரிமை சம்பந்தமாக உரிய அரசு அலுவலரை பிரதிவாதிகளாக இணைக்காமல் தமிழ்நாடு மின்சார பகிர்மான கழகத்தை இணைத்து வழக்கு தொடர்ந்ததாகவும், மேலும் தடை உத்தரவு யாதொன்றும் பிறப்பிக்கப்படவில்லை எனவும், அந்த இடம் அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் தார்சாலை எனவும் மேற்படி விவரம் கிராம நிர்வாக அதிகாரி அவர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளது எனவும் எதிர்மனுதாரர் வாதிட்டார். இது சம்பந்தமாக அரசு வழக்கறிஞர் அளித்த சட்ட கருத்துரை கீழே கொடுக்கபட்டுள்ளது :

> *"தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தாலுகா அணைந்த பெருமாள் நடானூர் கிராமம் அ.பு.ச எண். 32/11ஏ – ஹெக் 0.43.13 : அ.பு.ச எண். 32/11சி – ஹெக் 0.22.70 சொத்துக்கள். சம்பந்தமாக அம்பாசமுத்திரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.190/2020 என உறுத்துக் கட்டளை மற்றும் செயலுறுத்து கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளது சம்பந்தமாக சட்ட கருத்துரை.*
>
> *தென்காசி மாவட்டம் ஆலங்குளம் தாலுகா அணைந்த பெருமாள் நடானூர் கிராமம் அ.பு.ச. எண். 32/10 என் வகைப்பாடு செய்யப்பட்ட சொத்தானது அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் தார் சாலை ஆகும். மேற்படி விபரம் கிராம நிர்வாக அதிகாரி சான்றிலிருந்தும் புல எண்: 32 சம்பந்தப்பட்ட புல வரைபடத்தில் இருந்தும் கண்டு கொள்ள முடிகிறது. மேற்படி புல எண்: 32/10 தார் சாலையில் ஏற்கனவே மின் வாரியத்தால் மின் கம்பங்கள் நடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேற்படி இடம் தனியார் இடம் என்று வகைப்பாடும் செய்யப்படவில்லை. மேலும் புல எண் 32/10 சம்பந்தமாக அ.வ.எண். 190/2020ல் தபசில் காண்பித்தோ, வழக்கில் பரிகாரமாகவோ கோரப்படவில்லை. புல எண். 32/10 அரசுக்கு பாத்தியப்பட்ட சாலை என்ற முறையில் அரசாங்கமும் வழக்கில் தரப்பினராக கட்சி சேர்க்கபடவில்லை. மேலும் வழக்கில் தடை உத்திரவு யாதொன்றும் பிறப்பிக்கப்படவில்லை. இந்த நிலைமையில் புல எண். 32/10 ல் ஏற்கனவே மின் வாரியத்தால் நடப்பட்டுள்ள மின் கம்பத்தில் இருந்து உரிய மின் வாரிய சட்டத்திட்டங்களுக்குட்பட்டு மின் விநியோகம் அளிப்பதில் யாதொரு சட்ட தடையும் இல்லை என்ற வகைக்கு இந்த சட்ட கருத்துரை வழங்கப்படுகிறது."*

7.5 இந்நிலையில் ஒரு முறையீட்டில் குறிப்பிட்ட புகார் எதாவது நீதிமன்றத்தில் நடவடிக்கையில் நிலுவையில் இருந்தால் மின்குறைதீர்ப்பாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஆராய விரும்புகிறேன்.

குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதியின் 17(4) (இ) மற்றும் (ஈ) ஆகிய பிரிவுகளுக்கு ஈர்க்கப்படுகிறது. அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>17(4) (இ)</u> :*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*<u>17(4) (ஈ)</u> :*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது."*

7.6 இவ்வழக்கில் புல எண். 32/10, 11 தொடர்பாக OS: 190/2020 முன்பு திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு தற்போது திருநெல்வேலி மாவட்டம் பிரிவடைந்தபின் தென்காசி மாவட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அவ்வழக்கானது OS: 346/2022–ஆக தென்காசி மாவட்டம் ஆலங்குளம் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக OS: 190/2020 என்பது தற்சமயம் OS No. 346/2022 என்று உறுதியாகிறது. எனவே, குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதுதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதி 17(4) (இ) மற்றும் (ஈ) ஆகிய பிரிவுகளின்படி புல எண். 32/10, 11 தொடர்பாக எந்தவொரு தீர்வும் வழங்க இயலாது என தீர்வுசெய்யப்படுகிறது.

7.7 மேல்முறையீட்டாளரின் மற்ற சர்வே எண்கள் மீது நடப்பட்ட மின்கம்பம் குறித்த மேல்முறையீடானது உரிய அரசு அலுவலரான கிராம நிர்வாக அதிகாரி அவர்களால் பொதுபாதையில் இருப்பதாக சான்றளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையில் எந்தவித நிவாரணமும் வழங்க இயலாது என்று முடிவு எடுக்கப்படுகிறது.

7.8 புல எண்: 456–இல் இரண்டு உயரமுத்த மின்கம்பங்கள் ஒரு மின்மாற்றி (HVDS Distribution Transformer) நடப்பட்டு இதனால் 20 செண்டு நிலத்தில் தான் பயிர் செய்ய

முடியாத நிலை ஏற்பட்டதாக மேல்முறையீட்டாளர் வாதிட்டார். எதிர்மனுதாரர் தனது வாதுரையில், விவசாய மின் இணைப்பு கோரும் பயனீட்டாளருக்கு ஏற்கனவே சாலையோரத்தில் செல்லும் தாழ்வழுத்த மின்கம்பத்தில் உயர் அழுத்த மின்பாதை அமைத்து அதன் மூலம் விவசாய மின் இணைப்பு இரு பயனீட்டாளருக்கு அளித்ததாகவும், இதில் அவருடைய நிலத்தில் எந்தவித இடத்திலும் விவசாயத்திற்கு பாதிப்பு இல்லையென்றும் தெரியவருவதாக வாதிட்டார்.

7.9 மேலும் விவசாய நிலங்கள் ஒன்றுக்கொன்று அடுத்தடுத்ததாக இருப்பதாலும் ஒவ்வொரு நிலத்திற்கும் பொதுபாதை கிடையாது என்பதாலும், மின்மாற்றி நடப்பட்ட மின்கம்பம் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்ததாலும், அதன் எதிர்புறம் நீர்ஓடை இருந்ததால் அந்த பக்கம் நடமுடியவில்லை என்றும் அது மழை காலங்களில் நீர்வரத்து அதிகம் இருக்கும் பொழுது பாதுகாப்பற்ற நிலையும் மின்விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் அந்த வழியே மின்கம்பங்கள் நடப்படவில்லை என்றும் வாதிட்டார்.

7.10 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள 1985 காலகட்டத்தில் உள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.11 இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"51. Exercise in certain cases of powers of telegraph authority. –***

*Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which*

*the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.12 மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.13 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

7.14 மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது. மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையில் மின்கம்பம் புல எண்: 456–இல் எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு நடப்பட்டதாகவும், மேலும், எதிர்முனை நீரோடை பாதையாக இருப்பதால் மின்கம்பம் நட்டால் மழை காலங்களில் நீர்வரத்து அதிகம் இருக்கும் சமயங்களில்

மின்விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பாதுகாப்பு காரணங்களை கருதி நீரோடை பாதையில் மின்கம்பம் நடஇயலாது என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்று கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.15 மேல்முறையீட்டாளரின் அடுத்த முறையீட்டான தன்னுடைய பட்டா நிலமான புல எண்: 458யின் நடுவே உடைந்த மின்கம்பங்களை காழ்ப்புணர்ச்சி காரணமாக வீசி விட்டு சென்றதாக முறையிட்டார். எதிர்மனுதாரர் தனது வாதுரையில், மேல்முறையீட்டாளரின் இடத்தில் எந்தவிதமான உடைந்த மின்கம்பங்கள் எதுவும் தற்சமயம் போடப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரும் அதனை ஒப்புக்கொண்டதால் அந்த கோரிக்கை முடிவுற்ற நிகழ்வாக கருதப்படுகிறது.

7.16 மேல்முறையீட்டாளர், ஆழ்வார்குறிச்சி மின்வாரிய பகுதியில் உள்ள AP நாடானூரில் உள்ள தன்னுடைய வீட்டின் (07–655–09–275) மீட்டர் வீட்டிற்கு வெளியே இருந்தும், கேட்டில் பூட்டு போடாத சூழலில் ரீடிங் எடுக்காமல் door lock என்று அதிக பில் வருவது போல செய்ததாகவும், முருகாண்டியூரில் உள்ள தங்கள் குடும்ப வீட்டிற்கு மின்கட்டண விகிதத்தை மாற்ற கோரி AEக்கு அனுப்பிய விண்ணப்பம் முறையான பதில் கொடுக்காமல் பலமுறை நிராகரிக்கப்பட்டதாகவும், விவசாய மின்இணைப்பு எண் 07–060–016–615 ஓபன் போஸ்டில் உள்ள மீட்டர் door lock என்று குறிப்பிட்டு 6 மாதத்திற்கான கணக்கீட்டையும் மொத்தமாக வசூலிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

7.17 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்புக்கு உரிய கட்டணம் செலுத்தும் காலத்தில் மின்நுகர்வு பதிவு செய்யாததால் தனக்கு சராசரி மின்நுகர்வு அதிகம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாக வாதிட்டார். இதனை உரிமதாரர் திட்டமிட்டே செயல்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

7.18 எதிர்மனுதாரர், மின்நுகர்வோர் சென்னையில் வசிப்பதாலும், மின் இணைப்பு உள்ள இடம் உரிமதாரரின் பணியாளர் அணுகமுடியாதபடி கதவு மூடப்பட்டிருந்ததால் Door lock என பதிவிட்டு முந்தைய கால பயன்பாட்டை பதிவு செய்யப்பட்டிருந்ததாகவும் ஆகவே இதில் எந்தவிதமான வெறுப்பும் இல்லை என்றும் வாதிட்டார்.

மேல்முறையீட்டாளர் இந்த கோரிக்கையை மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையிட்ட பிறகு மன்றத்தில் இது சம்பந்தமாக உரிய அறிவுரை வழங்கியது தெரியவருகிறது. மேலும், நுகர்வோர் பேரேட்டை ஆராயும் போது அக்காலத்திற்கு பிறகு மின்நுகர்வு சரியாக பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது. இனி வரும் காலங்களிலும் உரிமதாரரின் அலுவலர் உரிய காலத்தில் மின்நுகர்வு பதிவு செய்ய தக்க நடவடிக்கை எடுத்து கண்காணிக்குமாறு உத்திரவிடப்படுகின்றது. மேலும் மின் கட்டண விகித மாற்றம் தொடர்பான கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நேர்வில் அக்கோரிக்கை முடிவுற்ற நிகழ்வாக கருதப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி,

(i) மேல்முறையீட்டாளர் மின்கம்பம் நடப்பட்டதாக கோரும் புல எண்கள் உள்ள இடம் பொதுபாதை என உரிய அரசு அலுவலரின் சான்றின் மூலம் அறியப்படுவதால் அம்மின்கம்பங்களை அகற்றுமாறு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதாக இல்லை. மேலும், மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான புல எண் 32/10 தொடர்பாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS: 346/2022 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளர் அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க இயலாது என முடிவு செய்யப்படுகிறது.

(ii) மேலும் மேல்முறையீட்டாளரின் மின்நுகர்வு கணக்கீடு சம்பந்தமான புகார்கள் ஏற்கனவே நேர்வு செய்யப்பட்ட நிலையில் இனிவரும் காலங்களில் மின்நுகர்வு கணக்கீட்டை தவறாமல் உரிய காலத்தில் பதிவு செய்ய எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 22/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்

1. திரு இரா. சரவணராஜ், – By RPAD
21, சாய் நகர், போரூர் கார்டன் பேஸ் I,
வானகரம், சென்னை – 600095.

2. உதவி செயற்பொறியாளர்/ விநியோகம்/அம்பாசமுத்திரம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
அம்பை – 627 405.

3. உதவி பொறியாளர்/ விநியோகம்/கடையம்,
திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110/11 KV கடையம் துணை நிலைய வளாகம்,
கட்டேரிப்பேட்டை, தென்காசி.

4. மேற்பார்வை பொறியாளர், – By email
**திருநெல்வேலி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மகாராஜா நகர், திருநெல்வேலி – 627 011.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.